(ஆ) தமிழ்நாடு உணவுப் பொருள் வர்த்தகக் கழகத்தினிடம் ஒப்படைக்கப்பட்ட நவீன அரிசி ஆலைகளின் மதிப்பு இன்னும் அரசினால் கணக்கிடப்படவில்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தமிழ்நாட்டிலுள்ள சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் மொத்தம் எல்லா ஆலைகளின் மூலம் மொத்தம் எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இக்கேள்வி, திருவொற்றியூர் நவீன அரிசி ஆலை பற்றியது. மொத்தம் எவ்வளவு என்று கேட்டால் அதன் விவரம் அமைச்சர் அவர்களிடம் இருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உஸ்ரா. எட்மண்ட் : விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தருகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: இப்போது தஞ்சை மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அப்படி நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறபோது மூட்டை ஒன்றுக்கு அதிகமாக மூன்று கிலோ —58 ப்ளஸ் 3—61 கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் கொடுக்கக்கூடிய கிரயம் 58 கிலோவிற்குத்தான் கொடுக்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உஸ்ரா. எட்மண்ட் : அப்பேர்ப்பட்ட நிலைகள் ஏற்படுமானால் அவை உடனடியாகத் தவிர்க்கப்படவேண்டும் என்று அரசு ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறது.

திரைப்படப் பிரிவு.

*251 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாடு அரசின் திரைப்படப் பிரிவு இதுவரை எத்தனைப் படங்களை எடுத்துத் திரையிட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: செய்திப்படங்கள் (31—1—1978 வரை 182

விளக்கப்படங்கள் 34